இலங்கையின் குடியேற்றம்

அலகுபரீட்சை – 02

நா.பிரகாஸ் B.A **வரலாறு** **1 மணித்தியாலம்**

பகுதி -i

1. இந்து சமுத்திரத்தை கடந்து இலங்கை வந்த நவீன மனிதன் எப்பெயரால் அழைக்கப்படுகிறான்.
   1) ஆதிஹோமோசேப்பியன் 3) ஹோமோ நியண்டதாலன்சிஸ்
   2) ஹோமோ இரெக்டஸ் 4) ஹோமோ ஹபிலஸ்

2. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் சுற்றாடல் வலயங்களை தெரிவு செய்வதில் முக்கியமாக அமைந்த காரணி.
   1) வெப்பநிலை 3) மழைவீழ்ச்சி
   2) மண்வளம் 4) தரைத்தோற்ற வேறுபாடு

3. அம்பாந்தோட்டை 125000 ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் எப் பிரதேசத்தில் கல்லாயுதங்களை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் இடம்.
   1) புந்தல 3) இராவணஎல
   2) பதிராஜவெல 4) கித்துல்கலபெலிலென

4. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகைகளுள் ஒன்றாக அமைவது
   1) அலிகல 3) இராவணஎல
   2) பதிராஜவெல 4) பாகியன்கல

5. தாழ்நில ஈரவலயத்தில் வாழ்ந்த மனிதன் அதிகம் விரும்பி உண்ட உணவுகளில் ஒன்றாக காணப்படுவது.
   1) காட்டுப்பலா 3) நத்தை
   2) தித்தயா 4) மான்

6. செந்நிற கற்களால் உராய்ந்து பூசப்பட்ட எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட கற்கால குகை
   1) உடரஞ்சாமடம் 3) பதிராஜவெல
   2) பெரகல 4) பாகியன்கல

7. நிலையான குடியேற்றம் , விவசாயம் ஆரம்பம் போன்ற முக்கிய அம்சங்கள் தோற்றம் பெற்ற காலம்.
   1) வரலாற்றுக்கு முற்பட்டகாலம் 3) ஆதிவரலாற்று காலம்
   2) முன் வரலாற்று காலம் 4) வரலாற்று காலம்

8. கி.மு 700-450 ஆம் ஆண்டுக்குரியதான பிரபுக்கள் பயன்படுத்தியதாக கருதப்படும் கல்லறை மயானம்.
   1) பெல்லன்பதிபெல்லஸ்ஸ 3) இராவணஎல
   2) இபன்கட்டுவ 4) உடரஞ்சாமடம்

www.lkedu.lk

9. முன் வரலாற்று காலத்தில் உடரஞ்சாமடத்தில் வெள்ளை நிறப்பிண்ணியில் சிவப்பு நிறக்கோடுகளுடன் கண்டுபிடிக்கப்பட்ட பாத்திரம்.
   1) சட்டி
   2) பானை
   3) குவளை
   4) மடக்கு

10. குளத்தை அடிப்படையாக அமைக்கப்பட்ட கிராமம் அழைக்கப்பட்ட விதம்.
   1) வாவிகாம
   2) பரிகித்தகம
   3) எல்லங்காவ
   4) வெப்பிரபாதனய

11. 1ம் விஜயபாகுவின் பனாகடுவ செப்பு சாசனத்தில் நுருபுரம் என அழைக்கப்பட்ட தலைநகரம்.
   1) பொலனறுவை
   2) தம்பதெனியா
   3) அனுராதபுரம்
   4) சிகிரியா

12. பிராமி கல்வெட்டில் குடும்பத்தலைவன் அழைக்க பயன்பட்ட சொல்.
   1) குர்ஹபதி
   2) கமிக
   3) கஹபதி
   4) கிராமிக

13. கி.மு 250 ஆண்டு கல்வெட்டில் புரகமத்த என அழைக்கப்பட்டவரை குறிப்பிட்ட பதம்.
   1) படகு துறையை நிர்வகிப்பவர்
   2) குதிரை படை நிர்வகிப்பவர்
   3) யானைப்படை நிர்வகிப்பவர்
   4) வர்த்தகத்துறை நிர்வகிப்பவர்

14. ஆரம்ப வரலாற்றுக்கால குடியேற்றம் தோற்றத்துக்கு காரணமான அமையும் பிரதான சான்றாக காணப்படுவது.
   1) கிராமியக்குளங்கள்
   2) மழைவீழ்ச்சி
   3) வெப்பநிலை
   4) மண்வளம்

15. குருநாகல் மாவட்டத்தின் கனேகந்த மற்றும் கல்லேன விகாரை கல்வெட்டுக்களில் அணைக்கட்டு அழைக்கப்படும் விதம்.
   1) கலிங்கல்
   2) கலிங்கல் தொட்டி
   3) அலைதாங்கி
   4) அவரண

16. பின்வரும் நிரல்1 இல் தொழற் கிராமங்களும் நிரல்2 அவை அழைக்கப்பட்ட முறைகளும் தரப்பட்டுள்ளது. அவற்றை இணைக்கும் போது சரியாக அமையும் விடைத்தொகுதி

நிரல்1	**நிரல்2**
1. விவசாயக் கிராமம்	A- கேவட்டகாம
2. வர்த்தகக் கிராமம்	B- வட்டகீகாம
3. தச்சர் வாழ்ந்த கிராமம்	C- நியகம்
4. குயவர் வாழ்ந்த கிராமம்	D- சுசீகரகாம
5. மீனவர் கிராமம்	E- கும்பகாரகாம

   1) BCDAE
   2) ACEDB
   3) DCBEA
   4) DCAEB

17. கி.பி 3 ஆம் நூற்றாண்டுக்குரிய குழி தோண்டி மண் பூசப்பட்ட வீட்டின் தளம் அமைக்கப்பட்ட வீடு காணப்பட்ட இடம்.
   1) உடஞ்சாடம்
   2) வலகம்பத்து
   3) அனுராதபுரம்
   4) ஹல்துமுல்ல

www.lkeol.lk

18. இரும்பு ஆரம்பயுகம் எனக் கருதப்படுவதும் தொழிநுட்ப அடிப்படையில் மாறுநிலை காலமாக கருதப்படும் காலம்
    1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
    2) முன் வரலாற்று காலம்
    3) ஆரம்ப வரலாற்றுகாலம்
    4) வரலாற்று காலம்

19. கற்கால மனிதன் உணவு தேவைக்காக உப்பு பயன்படுத்தப்பட்டதற்கான ஆதரம் கிடைக்கப்பெற்ற குகைகளுள் ஒன்றாக கருதப்படுவது.
    1) இராவணஎல
    2) பெரகல
    3) பாகியன்கல
    4) கித்துள்கலபெலிலென

20. ஆரம்ப வரலாற்று காலத்தில் முதன் முதலில் பயிரிடப்பட்ட பயிர்ச்செய்கை மேற்கொண்டனர்.
    1) நெற்பயிற்செய்கை
    2) சேனைப்பயிற்செய்கை
    3) மந்தைவளர்ப்பு
    4) வீட்டுதோட்டப் பயிற்செய்கை

பகுதி –ii

❖ பின்வரும் வினாக்களுள் எல்லாவற்றுக்கும் விடை எழுதுக.

1) i. அ. பின்வரும் இடங்களை இலங்கைப்படத்தில் குறிக்குக

இராவணஎல , மாகம , அனுராதபுரம் , திஸ்ஸமகாராம , பாகியன்கல , இப்பன்கட்டுவ, புந்தல, பதிராஜவெல , மினிகல்காகந்த , கித்துல்கலபெலிலென , பட்டதொம்பெலன , கல்சொகென் , யட்டிகல்பொத்த, பதுளை

ஆ. பின்வரும் படங்களை அவதானித்து வினவப்பட்ட வினாக்களின் விடைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A.



1. அருகில் காணப்படும் குகை யாது.
2. இது அடைந்துள்ள மாவட்டம்.
3. இது அமைந்துள்ள காலநிலை வலயம்.
4. இங்கு எக்கால மக்கள் வாழ்ந்துள்ளனர்.

B.



1. அருகில் காணப்படுவது யாது.
2. இது கண்டெடுக்கப்பட்ட இடம்.
3. இதனை உருவாக்க பயன்பட்ட உபகரணம்.
4. இது போன்ற பாத்திரம் வேறு எங்கு காணப்படுகிறது.

www.lkedu.lk

2) i. கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்று குறிப்பிடுக.

ii. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளிகள் இரண்டும் தாழ் நில ஈர வலயக் குகைகள் இரண்டும் குறிப்பிடுக.

iii. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் மேற்கொண்ட மரணச்சடங்கு முறைகள் 2 குறிப்பிடுக

iv. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் உணவு முறை அவன் வாழ்ந்த சூழலுக்கு காணப்பட்டதை மூன்று காரணங்களுடாக விளக்குக.

3) i. A- மடக்கு எனும் மட்பாண்டம் கிடைக்கப் பெற்ற இடம்.
B- வழைத்து புதைக்கப்பட்ட எலும்புக்கூடு கிடைக்கப்பெற்ற இடம்.
C- மக்களால் கைவிடப்பட்ட குளக்கிராமம் அழைக்கப்பட்ட விதம்.

- பின்வரும் A,B,C போன்றவற்றுடன் தொடர்புடைய விடைகளை குறிப்பிடுக.

ii. பின்வரும் A-D வரையான வினாக்களுக்குரிய விடைகள் தரப்பட்டுள்ளன.கீழ்வரும் அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்க.
A- மட்பாண்டங்கள் செய்வோர் வாழ்ந்த கிராமம்.
B- இரத்தினக்கல் அகழ்வோர் வாழ்ந்த கிராமம்.
C- கிராமத்தலைவர்
D- வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம்
(பரிகித்தகம , குர்ஹபதி , கமிக , கும்பகார , அபரிகித்தகம , மணிகாரகாம)

iii. வரலாற்றுக்கால குடியேற்றம் இயல்புகளை இரண்டு காரணங்கள் அடிப்படையாக விளக்குக.

iv. முன்வரலாற்றுக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக மூன்று காரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.

www.lkedu.lk